முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,
நாள். 21.11.2025.

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**
**<u>அசல் வழக்கு எண். 47/2025</u>**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமாயி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | பொன்னன் | வயது | : | 75 |
| ஊர் | : | பில்லாந்தி | தொழில் | : | இல்லத்தரசி |

**<u>வா.சா. 1 (ராமாயி ): வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதன்மை விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் **வாதி ஆவேன். நான் வாதி தரப்பு முதல் சாட்சி (வா.சா.1) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள இடது கைரேகை என்னுடையது தான். எனக்கு எழுத படிக்க தெரியாது. எனது வழக்கறிஞர் படித்து காட்டி அதை நான் புரிந்து கொண்டு இடது கைரேகை இட்டேன்.

**கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

**1. 13.05.2010 தேதியிட்ட கிரையப்பத்திரம் கணினி மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 29.01.2025 தேதியிட்ட பட்டா எண் 442 பிரதிவாதிகளின் பெயரில் தவறுதலாக வழங்கப்பட்ட இணையம் மூலம் கணினி நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எனது தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**(கற்றறிந்த எதிர்தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு இடது கைரேகை செய்தார்

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2025.11.21 17:46:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு